Alzheimer's Disease International

# உலகளாவிய அல்சைமர் வியாதி தொடர்பான பிரகடனம

நாம் பொதுச்சுகாதார மற்றும் சமூக நலம் கருதிய தேவைக்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டிய

கட்டாயத்தில் உள்ளோம். மூளைச் சிதைவு – டிமென்ஷி யா - நோய்க்கு முக்கிய காரணமாக அல்சைமர் வியாதி அமைந்துள்ளது. மூளைச் சிதைவு நோய் மனிதனின் மூளையைத் தாக்கி அவர்களுடைய ஆற்றலைச் சிதைத்து அவர்களை செயல் இழக்கச் செய்கிறது.

உலகம் முழுவதும் ஒவ்வொரு வருடமும் 4.6 மில்லியன் புதிய வியாதியஸ்தர்கள் டிமென்ஷியா நோயுடன் கண்டறியப்படுகின்றனர். அதாவது ஒவ்வொரு 7 வினாடிகளுக்கு ஒரு புதிய வியாதியஸ்தர்.

2050 ஆண்டுக்குள் 100 மில்லியன் மக்கள் இவ்வியாதியால் பாதிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. எந்த ஒரு நாடும் இத்தகைய நெருக்கடிக்கு முற்றிலும் தயாராக இல்லை.

உலகளாவிய ரீதியில் இந்த நோயைப் பற்றி போதுமான பிரச்சாரம் இந்நாள் வரையில்

ஏற்படவில்லை. இந்நிலை மாறியாக வேண்டும். தொடர்ச்சியாக வளர்ச்சியடைந்துவரும்

இப்பிரச்சினையினால் பலர் உதவியின்றி கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு கிடைக்க

வேண்டிய உதவிகள் உரிய நேரத்தில் கிடைக்காமையே இதற்கு காரணமாகும்.

77 நாடுகள் அங்கம் வகிக்கின்ற ஊலகளாவிய அல்சைமர் வியாதி கூட்டமைப்பு அரசாங்கங்களையும் நோயுடன் சம்மந்தப்பட்டவர்களையும் உடனபி நடவபிக்கை எடுக்கக் கோறுகின்றது.

ஒவ்வொரு நாட்டின் வளங்களுக்கு எற்ப கீழ்கண்ட குறிக்கோள்களைக் கொண்ட திட்டங்கள் அடைக்கப்பெறவேண்டும்.

1. வியாதியின் அறிகுறிகள் மற்றும் சிகிச்சை முறைகளைப் பற்றி மக்களுக்கு தெரியப்படுத்தத வேண்டும்.

2. விளக்கம், ஆர்வம் இவற்றை ஏற்படுத்துவதன் மூலம் பயங்கரத்தை நீக்குதல் வேண்டும்.

3. சுகாதார பணியாளர் சமூக சேவையினர் குடும்ப நலத்திட்டத்தினர் ஆகியோர்களுக்கு பயிர்ச்சி அளித்தல்.

4. அல்சைமர் நோயினால் பாதிப்பு அடைந்தவர்களுக்கு மருத்துவ சேவைகளை அளித்தல்.

5. இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீட்டிலோ அல்லது மருத்துவ இல்லங்களிலோ

தொடர்ந்து பராமரிக்க வசதிகள் செய்து கொடுத்தல்.

6. நோயாளிகளின் இருப்பிடங்களை பாதுகாப்பாக அமைத்தல்.

7. நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் தங்கள் வாழ்க்கை மற்றும் மருத்துவபராமரிப்பு

தொடர்பான விடயங்களில் பங்கெடுக்க வாய்ப்பு அளித்தல்.

8. இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதுமான வாழ்க்கை தரத்தை அமைத்துக்

கொடுத்தல்.

9. இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாக்க சட்டரீதியான மாற்றங்களை

கொண்டுவருதல்.

10. இந்நோயைப் பற்றியும் அதனைத் தடுக்கவேண்டிய முறைகளைப் பற்றியும் மக்களிடம் அறிவிக்க

போதுமான பொருளாதார முறைகளை ஏற்படுத்துதல்.

11. இந்நோய் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி முறைகளை ஊக்குவித்தல்.

**கீழ்க்கண்ட ஆறு கோட்பாடுகளைப் பராமரித்து அல்சைமர் மற்றும் இதர நோய்களுக்கு முக்கியத்துவம் பெற்றுத்தர வேண்டும்.**

1. நோயைப்பற்றிய விளக்கமும் ஆர்வமும் உண்டாக்குதல்
2. நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் மனித உரிமைகளை மதித்தல்
3. நோயாளிகளின் குடும்பங்கள் ஆற்றும் முக்கிய பணியினை அறிந்து கொள்ளுதல்
4. மறுத்துவ மற்றும் சமூக உதவி கிடைக்க வழி அமைத்தல்
5. நோயைக் கண்டறிந்த பின் உரிய சிகிச்சையின் முக்கியத்தை வலியுறுத்தல
6. பொதுச்சுகாதார மேம்பாடுகளின் மூலம் நோயினைத் தடுத்தல்

அல்சைமர் மற்றும் இதர நோய்கள் வயோதிகத்தின் தன்மையல்ல. இவ்வியாதிகளை தடுக்கும் முறைகள் உள்ளன. சிகிச்சை மூலம் இவ்வியாதியினால் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் அவர்களின்

குடும்பங்களின் அவஸ்தை நிலையை பெரும்பாலும் குறைத்தல் முடியும்.

www.alz.co.uk/kyotodeclaration
www.alz.co.uk/parisdeclaration

**Alzheimer's Disease International**

64 Great Suffolk Street, London SE1 0BL, United Kingdom
Telephone: +44 (0)20 7981 0880, Fax: +44 (0)20 7928 2357
Email: info@alz.co.uk, Web: www.alz.co.uk